பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 27 சனிக்கிழமை 14.10.2023 அதிர்வு 75

## புலமைப்பரிசில் பரீட்சை நாளை

தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை நாளை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 759 மாணவர்கள் 04▶



# 40 வருடங்களுக்குப் பின்னர் ஆரம்பமான கப்பல் சேவை!

## தொடக்கிவைத்தார் மோடி

## யாழில் அமோக வரவேற்பு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

இந்தியாவின் தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை உத்தியோகபூர்வமாக இன்று ஆரம்பமானது.

காலை 8.30 மணியளவில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்தைக் காணொலிக் காட்சி மூலம் டில்லியில் இருந்தபடி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்ததுடன் நாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் கொடியசைத்துத் தொடக்கி வைத்தனர். 04▶






## இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல்

### கப்பல் போக்குவரத்து ஆரம்ப நிகழ்வில் மோடி பேச்சு

- எம்.கே. ஷாகுல் ஹமீது -

"இந்தியா – இலங்கை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை நமது உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல். இதன் மூலம் இரு நாட்டு கலாசாரம், தொழில் வர்த்தகம் மேம்படும்."

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான 04▶



## தண்டவாளத்தில் தலையை வைத்து திருமலை இளைஞர் உயிர்மாய்ப்பு!

- துரைநாயகம் சஞ்சீவன் -

திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியில் உள்ள ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்து இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை 04▶

யாழ். போதனா வைத்தியசாலையில்

## பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் வெறியாட்டம்!

ஆண் ஒருவர் மீது கொடூர தாக்குதல் 04▶

# வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை: 1,000 ஆசிரியர்களுக்கு நியமனம்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வட மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய, 1000 பட்டதாரிகளை விரைவில் ஆசிரியர் சேவையில் இணைக்கவுள்ளார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–



வடமாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க 1000 பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதுடன் புதிய தொண்டர் ஆசிரியர்களைச் சேவையில் இணைக்கவுள்ளோம்.– என்றார்.

இந்திய கடற்றொழிலாளர்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சரின் முடிவு கடல் துறை சார்ந்த விடங்களின் அரசின் இறுதியான முடிவாக இருக்கும் என்றார்.




களனி கங்கையில் நீராடுவதற்காக அழைத்துச்செல்லப்பட்ட யானை ஒன்று சுமார் 20 அடி உயரத்தில் இருந்து விழுந்து காயமடைந்துள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த யானை சுமார் 70 வயதுடையது ஆகும்.

யானை பராமரிப்பாளர்கள் குழுவினரால் களனி கங்கையில் நீராடுவதற்காக மாப்பிட்டிகிராமத்தின் பாலத்தின் ஊடாக களனி கங்கைக்கு இந்த யானை அழைத்துச் செல்லப்பட்டுள்ளது.

யானை நீராடி முடித்து சென்ற போது எதிர்பாராத விதத்தில் யானை பாலத்திலிருந்து கீழே விழுந்துள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த கால்நடை வைத்திய அதிகாரிகள் பாரந்தூக்கியின் உதவியுடன் யானையை மீட்டு லொறி ஒன்றில் ஏற்றி மேலதிக சிகிச்சைக்காக கொண்டு சென்றுள்ளனர் என நவகமுவ பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## சுற்றுலாப் பயணியாக வந்த வெளிநாட்டுப் பிரஜை கைது!

சுற்றுலாப் பயணியாக வந்து கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய மாலைதீவைச் சேர்ந்த பிரஜையே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## திருகோணமலைக் கடலில் கரை ஒதுங்கும் கடற்பாசி!

### மீனவருக்கு அதனால் பெரும் சிக்கல்



திருகோணமலைக் கடலில் ஒதுங்கும் கடற்பாசியினால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை கடற்பகுதியில் தற்போது கடற்பாசி ஒதுங்குவதனால் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களின் வலையில் பெருமளவில் கடற்பாசிகளே சிக்குகின்றன எனவும், இதனால் மீன்பிடியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருமளவில் சிக்கும் பாசியினால் வலையை இழுக்க முடியாதுள்ளதாகவும், வலையைச் சுத்தம் செய்வதற்கே அதிக நேரம் செலவாவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப்பயணிகளை கவர்ந்து வருகின்ற திருகோணமலை கடற்கரை, தற்போது பாசிகள் ஒதுங்கி அழகு குன்றிக் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

## கட்டுநாயக்காவில் யுவதி ஒருவர் கைது!

கட்டாருக்கு சட்டவிரோதமான முறையில் வீட்டு வேலைக்காகச் செல்ல முயற்சித்த இளம் யுவதி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய இளம் யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்படாத முகவர் ஒருவரால் கட்டாருக்கு அனுப்ப முற்பட்ட போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதுக்கு மேற்பட்ட யுவதிகள் வீட்டு வேலைக்காகக் கட்டாருக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், கைது செய்யப்பட்ட இளம் யுவதி வீட்டு சேவைக்கு விண்ணப்பிப்பதற்கான சரியான வயதை பூர்த்தி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட யுவதி மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்ப நிகழ்வில்














(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புலமைப்பரிசில்...**

தோற்றுகின்றனர் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் வடக்கில் இம்முறை 71 இணைப்பு நிலையங்களும் 209 பரீட்சை மண்டபங்களும் செயற்படவுள்ளன. இவ்வாறு செயற்படும் பரீட்சை மண்டபங்களிலேயே இந்த 18 ஆயிரத்து 759 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இதேநேரம் வடக்கில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் யாழ்ப்பாணம் 1 வலயத்தில் 12 இணைப்பு நிலையங்களின் கீழ் 41 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 782 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் அதேநேரம் யாழ்ப்பாணம் 02 வலயத்தில் 10 இணைப்பு நிலையங்களின் கீழ் 54 பரீட்சை நிலையங்களில் 5 ஆயிரத்து 208 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 இணைப்பு நிலையங்களின் கீழ் 28 பரீட்சை நிலையங்களில் 2ஆயிரத்து 219 மாணவர்களும், முல்லைத்தீவில் 9 இணைப்பு நிலையங்களின் கீழ் 24 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 162 மாணவர்களும், வவுனியா மாவட்டத்தில் 14 இணைப்பு நிலையங்களின் கீழ் 34 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 212 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

அதேநேரம் மன்னாரில் 16 இணைப்பு நிலையங்களின் கீழ் 28 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 176 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.” – என்றார்.

**40 வருடங்களுக்குப் பின்னர்...**

50 பயணிகள் மற்றும் ஊழியர்களுடன் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட செரியாபாணி கப்பல் நான்கு மணிநேர பயணத்தின் பின் மதியம் 12.20 காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் செரியாபாணி கப்பலின் வரவேற்பு நிகழ்வில் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மதியம் 1.15 மணியளவில் காங்கேசன்துறைதுறைமுகத்தில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் பச்சை கொடி அசைத்து மீண்டும் தமிழகத்தின் நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கி 31 பயணிகளுடன் கப்பல் புறப்பட்டது.

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவருக்கு ஒருவழிக் கட்டணமாக 27 ஆயிரம் ரூபாவும், இரு வழிக் கட்டணமாக 53 ஆயிரத்து 500 ரூபாவும் அறவிடப்படவுள்ளதுடன், 50 கிலோகிராம் வரை இலவசமாகப் பொருட்களை எடுத்துச் செல்லலாம்.

இறுதியாக 1984 ஆம் ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் கப்பல் சேவை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

40 வருடங்களின் பின்னர் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே இந்தக் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்படுகின்றது.

**இரு நாட்டு உறவுகளை...**

பயணிகள் கப்பல் போக்குவரத்தை இன்று காலை 8.30 மணியளவில் காணொலிக் காட்சி மூலம் டில்லியில் இருந்தபடி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

அப்போது பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில்,

“இந்தியா – இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இரு நாடுகளுக்கு இடையேயான நமது உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல். இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளோம். இதன் மூலம் இரு நாட்டு கலாசாரம், தொழில் வர்த்தகம் மேம்படும்.

இந்தியாவும் இலங்கையும் கலாசாரம், வர்த்தகம் மற்றும் நாகரிகத்தின் ஆழமான வரலாற்றைப் பதிவை கொண்டுள்ளவை. நாகப்பட்டினம் மற்றும் அருகிலுள்ள நகரங்கள் நீண்ட காலமாக இலங்கை உட்பட பல நாடுகளுடன் கடல் வணிகத்துக்குப் பெயர் பெற்றவை.

சுப்ரமணியபாரதியாரின் ‘சிந்துநதியின் மிசை’ பாடலில், பட்டினப்பாலை, மணிமேகலை முதலிய சங்க இலக்கியத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல்வழி போக்குவரத்து இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இந்தக் கப்பல் சேவை அந்த வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகளை உயிர்ப்பித்திருக்கின்றது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தின் போது, நமது பொருளாதாரப் பங்காளித்துவத்துக்கான தொலைநோக்கு ஆவணத்தைக் கூட்டாக ஏற்றுக்கொண்டோம். இணைப்பு என்பது இரண்டு நகரங்களைக் கொண்டுவருவது மட்டுமல்ல. மேலும் இது நமது நாடுகளை நெருக்கமாக்குவது, நமது மக்களை நெருக்கமாக்குவது மற்றும் நமது இதயங்களை நெருக்கமாக்குவது. இணைப்பு வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்கள் – மக்கள் உறவுகளை மேம்படுத்துகின்றது. இது இரு நாட்டு இளைஞர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றது.

2015 முதல் இரு நாடுகளுக்கும் இடையே போக்குவரத்து இணைப்பில் மேம்பட்ட ஒத்துழைப்பு இருக்கும். 2015 இல் நான் இலங்கைக்கு பயணம் செய்ததைத் தொடர்ந்து, டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கப்பட்டது. பின்னர், இலங்கையிலிருந்து குஷிநகரில் முதல் சர்வதேச விமானம் தரையிறங்கியதைக் கொண்டாடினோம். 2019 இல் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நேரடி விமான சேவை தொடங்கியது. தற்போது, நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை மற்றொரு முக்கியமான படியாகும்.” – என்றார்.



**தண்டவாளத்தில் தலையை வைத்து...**

இடம்பெற்றுள்ளது.

பாலையூற்று பகுதியைச் சேர்ந்த அபயரத்னகே தரிந்து அசங்க (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் பாவனையால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் வெறியாட்டம்!

## ஆண் ஒருவர் மீது கொடூர தாக்குதல்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நபர் ஒருவருடன் முரண்பட்டு அவரை மிக மோசமாகத்

தாக்கும் வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது.

இரண்டு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இணைந்து அந்த நபரைக் கீழே தள்ளி விழுத்தி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் முறையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய இழுவைப் படகுகளுக்கு இங்கு ஒருபோதும் இடமில்லை

## இதுவே அரசின் முடிவும் என்கிறார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(த.சுபேசன்)

இந்திய இழுவைப் படகுகளுக்கு இலங்கையில் ஒரு செக்கன் கூட இடமில்லை இதுவே அரசின் முடிவு என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் கடற்தொழிலாளர்களுக்கு நன்கொடையாக எரிபொருள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

இலங்கையில் சிறிது காலமாக இந்திய இழுவைப் படகுகளின் வரவு குறைவாகக் காணப்படுகிறது. எமது கடற்தொழிலாளர்கள் இந்தியாவுக்குப் படகில் சென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர் ஆகியோரை சந்தித்து தமது நிலைமையை விளங்கப்படுத்தியதன் விளைவால் தான் இந்தியப் படகுகளின் வருகை குறைவடைந்துள்ளது.

இது இலங்கை கடற்படை சார்ந்த பிரச்சினை அல்ல. இது வடக்கில் வாழும் தமிழ் கடற்தொழிலாளர்களுடைய பிரச்சினை.எமது கடற்படை அத்துமீறும் இந்திய மீன்பிடிப் படகுகளை பிடிக்கும் போது அங்கே கடற்படை சார்ந்து ஓர் பிரச்சாரம் முன்வைக்கப்படுகிறது.

உண்மையில் அவர்கள் சட்டவிரோதமாக எமது வளங்களை, வாழ்வாதாரங்களை அழிக்கும் போது தான் கடற்படை அவர்களை கைது செய்கின்றது.

வடக்கில் உள்ள 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தியா சென்று இது கடற்படையின் பிரச்சினை அல்ல. இது எமது தமிழ் மீனவர்களுடைய பிரச்சினை என்ற உண்மையை அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

வடமராட்சி உள்ளிட்ட இடங்களில் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட மீனவப் பிரதிநிதிகளை இந்தியாவுக்கு அனுப்பி எமது மீனவர்களின் பிரச்சினையை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்திய இழுவைப் படகு விடயத்தில் கடற்தொழில் அமைச்சராக எனது முடிவே இறுதி முடிவு. ஒரு செக்கன் கூட இந்திய இழுவைப் படகுகளுக்கு இங்கு இடமில்லை. இதுவே அரசின் முடிவும்.– என்றார்.



# கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் பொருத்தமான மரங்கள் நட முடிவு!

கொழும்பு புறநகர் பகுதிகளில் மிகவும் பொருத்தமான மற்றும் தரமான மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை உறுதி செய்யும் முறையான அமைப்பைத் தயார் செய்யுமாறு இராஜாங்க அமைச்சர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

புறநகர் பகுதிகளில் ஏற்படக் கூடிய அபாயகரமான மரங்கள் முறிந்து விழுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 11 ஆம் திகதி கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மேற்படி விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உயிர்கள் மற்றும் உடமைகளைப் பாதுகாப்பது, அவசரகாலச் சூழ்நிலைகளின் போது மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தடையின்றிப் பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறித்து இதன் போது பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

குறுகிய கால தீர்வாக, விசேடமாகக் கொழும்பு மாநகர சபையின் அதிகார வரம்பில்எதிர்காலவேலைத்திட்டங்களை முறையான ஆய்வின் பின்னர் நடைமுறைப்படுத்துமாறு கூறப்பட்டது.

இதற்காக சிவில் பாதுகாப்புப் படையின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

தேசிய தாவரவியல் பூங்கா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெறவும் அறிவுறுத்தப்பட்டது.

புறநகர்ப் பகுதிகளில் விழும் அபாயத்தில் உள்ள மரங்களை அடையாளம் காண சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப முறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், அனர்த்த முகாமைத்துவ நிலையம், உள்ளூராட்சி அமைச்சு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், தேசிய தாவரவியல் பூங்கா, வனவியல் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பேராதனை பல்கலைக் கழகம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாட்டின் துரதிர்ஷ்டம்

'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாகி இருக்கின்றது இலங்கையின் நிலைமை.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சீரழிந்து, சின்னாபின்னமாகி, சிதைந்து, அதல பாதாளத்தில் விழுந்து கிடக்கும் இலங்கையின் பொருண்மியத்தைச் சர்வதேச உதவிகளுடன் மீளக் கட்டமைத்துத் தூக்கி நிறுத்தலாம் என்று பார்த்தால், சர்வதேச நிலைவரங்களே காலை வாரும் விவகாரமாக மாறும் சோகக் கட்டம் இலங்கைக்கு.

'கொவிட்' தொற்று என்ற சர்வதேசப் பிணியாலும் பாதிப்புற்று, முடங்கிப் போன இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் மீளத் துளிர் விடத் தொடங்கிய போது ரஷ்யா - உக்ரைன் போர் வெடித்து சர்வதேச நெருக்கடிகள் - இக்கட்டுகள் - பாதிப்புகள் - போன்றவற்றை தந்து நின்றது.

அந்தப் போரினால் எழுந்த பின்னடைவுகள், சவால்களுக்கு மத்தியிலும் அவற்றை எதிர்கொண்டு மீண்டெழ முயற்சிக்கையில், பாலஸ்தீனம் - இஸ்ரேல் மோதல் பெரும் யுத்தமாக வெடித்து, இலங்கையின் மீழ எழுச்சிக்கு சற்றுச் சாதகமாகி வந்த சர்வதேச புறநிலைகளை தலைகீழாகப் புரட்டிப்போட்டு விட்டது. இந்த யுத்தம் மத்திய கிழக்கு முழுவதும் பரவக் கூடிய ஏது நிலைகள் உள்ளன. பலஸ்தீனத்துக்கு ஆதரவாக இஸ்லாமிய நாடுகள் பலவும் கறுவிக் கொண்டு நிற்கின்றன.

இந்தப் பின்புலத்தில் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயரும் சாத்தியங்கள் தென்படுகின்றன. ஏற்கனவே மசகு எண்ணெய் ஐந்து டொலர்கள் உயர்ந்து பீப்பாய் ஒன்று நூறு டொலர்கள் என்ற விலையை எட்டி விட்டது. அடுத்து வரும் வாரங்களில் இது மேலும் உயரும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு இலங்கையை நேரடியாகப் பாதிக்கும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இலங்கையில் எரிபொருள்களின் விலை கணிசமாக உயரும். இது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியாகவே பெரும் தொடர் பாதிப்புகளை ஏற்படுத்தும். பொருள்களின் விலைகள், மின்சாரக் கட்டணம் உட்பட சேவைகளின் கட்டணங்கள் போன்றவை உயரும். பண வீக்கம் ஏற்படும்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் துவண்டு கிடக்கும் நாட்டையும் மக்களையும் இந்நிலைமை மிக மோசமாகப் பாதிக்கும்.

யுத்தம் காரணமாக இஸ்ரேலில் பணிபுரியும் 20 ஆயிரம் இலங்கையரும் நாடு திரும்பினால், நாடு கணிசமான அந்நிய செலாவணியை இழக்கும். இத்தகைய யுத்தத்தினால் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர். மத்திய கிழக்கில் புதிய வேலை வாய்ப்புகள் இலங்கைக்குக் கிட்டாமல் போகும். இந்த யுத்தம் காரணமாக இலங்கையின் ஏற்றுமதியில் வீழ்ச்சியும், சுற்றுலாப் பயணிகளின் வருகையும் கூடக் குறைவடையும் அல்லது பாதிப்புறலாம்.

எந்த வகையில் பார்த்தாலும் இது இலங்கைக்கு போதாத காலம்தான்....!





# 1,000 தென்னைகள் நடும் பணி மட்டக்களப்பில் ஆரம்பமாகியது!

(பழுவூரான்)

மாவட்டத்துக்கு ஆயிரம் தென்னங் கன்றுகளை நடும் நடவடிக்கைக்கு அமைய முதல் கட்டமாக மட்டக் களப்பு புதுக்குடியிருப்பு மாவட்ட தொழில் பயிற்சி நிலை யத்தில் 200 தென்னம் கன்றுகள் நடும் நிகழ்வு வியாழக் கிழமை (12) இடம்பெற்றது.

தென்னை, பனை செய்கைகளை ஊக்குவித்தல் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்களின் உற்பத்தி செய்யும் தொனிப்பொருளில் இளைஞர் தேசிய மன்றம் மற்றும் புதுக் குடியிருப்பு பயிற்சி நிலையம் ஆகியன இணைந்து இதனைஏற்பாடு செய்திருந்தன.

இந் நிகழ்வில் மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் மனுல சமல் பெரேரா, மாவட்ட பனை பிரிவு பிரதி பனிப்பாளர் கே.விராஜ், நிர்வாக உதவி பணிப்பாளர் உ.நிர்மாலி, மற்றும் ஊழியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் இணைந்து தென்னம் கன்றுகளை நட்டு வைத்தனர்.





# சம்மாந்துறை பிரதேசத்துக்கு அம்பாறை அரச அதிபர்

(அஸ்ஹர் ஆதம் )

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம சம்மாந்துறை பிரதேசத்துக்கு வியாழக்கிழமை விஜயம் செய்தார்.

இதன் போது கடந்த சில தினங்களுக்கு முன்னர் யானைத்தாக்குதலுக்கு உள்ளாகி சேதடைந்த வீடுகளையும் பார்வையிட்டார் . இவருடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் எம்.ஹனீபாவும் உடனிருந்தார்.

# தென்மராட்சி மாம்பழ வலயத்தில் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. நேரில் சென்றார்



(த.சுபேசன்)

தென்மராட்சி, எழுதுமட்டுவாழ், மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள மாம்பழ தொழில்நுட்ப விவசாய வலயத்தை வெள்ளிக்கிழமை (13) யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதன் பார்வையிட்டார்.

மாம்பழ உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் இதன்போது கேட்டறிந்திருந்தார்.

இதன்போது மாம்பழ உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளான சந்தைப்படுத்தல் பிரச்சினை, குரங்குகளது பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

தென்மராட்சி மாம்பழ உற்பத்தி வலயம் கடந்த 2018 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விவசாய பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

தற்போது 250 ஏக்கரில் 500 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் இலங்கை அரசு மற்றும் உலக வங்கியின் நிதியுதவியில் விவசாய அமைச்சால் மாம்பழ உற்பத்தி வலயம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பில் விழிப்புணர்வுச் செயலமர்வு

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நேற்று (13) இடம்பெற்றது.

மாவட்டத்தில் திறன்மிகு இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஆர்.பி.எல். முறையில் என்.வி.கியூ சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதிஸ்குமார் தலைமையில் மனிதவலு திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் வி.மைக்கல் கொலின் நெறிப்படுத்தலில் இது நடைபெற்றது.

மாவட்ட தொழில் நிலையம், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து முறையான அல்லது முறைசார் தொழில் திறனைக் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அதிகாரமளித்தல் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இச்செயலமர்வை எற்பாடு செய்திருந்தன.

நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிக்கும் நோக்கமாகக் கொண்டு தொழில்நுட்ப அறிவுமிக்க மனிதவளத்தை வலுவூட்டும் அடிப்படையில் இது ஒழுங்கமைக்கப்பட்டது.

உலகளாவிய மட்டத்திலான தொழிற்படையை இலங்கையில் உருவாக்கும் நோக்கில் அரச அங்கீகாரம் பெற்ற தொழில் கல்வி நிறுவனங்களால் பெறுமதியான சான்றிதழ்களை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் எனும் நோக்கத்துடன் இந்தச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

இந்தச் செயலமர்வில் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. கருணாகரன், திறன் அபிவிருத்தி அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு, மண்முனை மேற்கு, காத்தான்குடி, மண்முனைப்பற்று பிரதே செயலகத்தை சேர்ந்த தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# 39 ஆவது தேசிய மீலாத் விழா தொடர்பில் கலந்துரையாடல்

## முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

39 ஆவது தேசிய மீலாதுன் நபி விழா முசலி சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு முன்னேற்பாட் டுக் கலந்துரையாடல் ஒன்று புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாச்சார அமைச்சர் விதுர விக்ரமா நாயக்க, கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோ ரின் பங்கேற்போடு முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் புத்தசாசன சமய விவ காரங்கள் அமைச்சின் செயலாளர், மன் னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், முசலி பிரதேச செயலாளர், முஸ்லிம் கலாச்சாரத் திணைக்கள உயர் அதிகாரி கள், முப்படை பிரதானிகள், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுப்பிரதானிகள், திணைக் களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.


# சமகால அரசியல் உரையரங்கு

**15.10.2023 (ஞாயிறு) பிற்பகல் 3.00 மணி**
**இளங்கலைஞர் மன்றம்**
**சட்டநாதர் வீதி,நல்லூர்**



**தலைமையுரை**
**திரு. பொ. ஐங்கரநேசன்**
தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

**கருத்துரைகள்**



**தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?**
**திரு.நிலாந்தன்**
அரசியல் ஆய்வாளர்



**நலிவுறும் தமிழ்த் தேசியம்**
**திரு. வி.எஸ். சிவகரன்**
தலைவர் - தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம்



பிராந்திய அரசியலில் **இஸ்ரேல் - ஹமாஸ் போர் :**
மாற்றங்களும் விளைவுகளும்
**பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம்**
துறைத்தலைவர் - அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



# புல்மோட்டையில் மாணவர்களுக்கு ரூ.15 லட்சம் பெறுமதியில் சைக்கிள்கள்

(அப்துல்சலாம் யாசீம், ஹஸ்பர் )

திருகோணமலை – புல்மோட்டையில் வறிய மாணவர்களுக்கு 15 லட்சம் ரூபா செலவில் சைக்கிள்கள் நேற்று (13) வழங்கப்பட்டன.

சர்வதேச மனித நேய அமைப்பான முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் முன் மாதிரிக் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் புல்மோட்டை சதாம் முஸ்லிம் வித்தியாலயம், ஜின்னாபுரம் கலவன் பாடசாலை மற்றும் புல்மோட்டை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் 25 மாணவர்களுக்கு சைக் கிள்கள் வழங்கப்பட்டன.

புல்மோட்டை சதாம் வித்தியாலத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் குச்சவெளி உதவி பிரதேச செயலாளர் திருமதி பீ. மோஹனமுரளி, புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.டபிள்யூ விஜயகோன், பாடசாலை அதிபர்கள், முஸ்லீம் எயிட் செயற்றிட்ட முகாமையாளர் பஸ்லான் தாசிம், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழி யர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.






# விவசாய உள்ளீடுகள் வழங்கல்





(ஹஸ்பர்)

முஸ்லிம் எயிட் கிண்ணியா பிரதேசத்தில் முன்னெடுத்துவரும் விவசாய வாழ்வாதரத் திட்டத்தில் ஒரு பகுதியாகப் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் பழ மரக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலர் எம்.எச்.எம் கனி தலைமையில் வியாழக்கிழமை (12) நடைபெற்றது.

இந் நிகழ்வில் மஜீத் நகர், நடுவூத்து, மஹருகிராம பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கு பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனியால் இவை வழங்கிவைக்கப்பட்டன.

இதில் பிரதேச செயலக அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பாளர் கே.பாஜில் , முஸ்லிம் எய்ட் அதிகாரி எஸ்.எம்.ரிபாய் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , விவசாய போதனாசிரியர்கள் கலந்து கொண்டனர்.




## அதிநவீன தொழில்நுட்ப கோபுரம் அமைப்பு

# மருதமுனையில் மக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை பிரதேசத்தில் மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தின் கிழக்கு பக்கமாக அதிநவீன தொழில்நுட்ப கோபுரம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து ஒன்று கூடிய மக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நள்ளிரவு மற்றும் அதிகாலை வேளையில் இந்தப் பகுதிக்கு வருகை தந்த ஒரு குழுவினர் காலை நான்கு மணிக்கு முன்னர் அதிநவீன சக்தி வாய்ந்த இந்தக் கோபுரத்தை நாட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மக்கள் குடியிருப்பு பகுதியில் சட்ட விரோதமாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோபுரம் தொடர்பில் கல்முனை மாநகர சபை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒருவிடயத்தைநடைமுறைப்படுத்தும் போது அந்தப் பிரதேசத்தில் வாழும் பொது மக்களின் அபிப்பிராயத்தை பெறாமல் , மக்கள் தூங்கும் வேளையில் கோபுரம் நடப்பட்டதன் மர்மம் என்ன? என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் பகுதியில் வாழும் குடியிருப்பு மக்களை பாதிக்கும் நடவடிக்கையாக இந்த கோபுரம் அமைக்கப்படுமாக இருந்தால், உடனடியாக கோபுரத்தை இந்தப் பகுதியில் இருந்து அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோபுரம் அமைக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் இதனால் இப்பகுதி மக்கள் அடையப் போகும் பயன்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## யானை, முதலை தாக்குதலால்

# உயிரிழந்தோரது குடும்பங்களுக்கு நஷ்டஈட்டு காசோலைகள் வழங்கல்!



(அ.அஸ்வர்)

காட்டு யானை மற்றும் முதலை தாக்குதலால் உயிரிழந்த 04 குடும்பங்களுக்கு நஸ்டஈட்டு காசோலைகள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (12) சம்மாந்துறை அப்துல் மஜீத் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது 2023 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் யானை மற்றும் முதலைத் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் காயங்களுக்கு உட்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. ஒருவருக்கு தலா 10 லட்சம் ரூபா வீதம் 52 லட்சம் ரூபா காசோலைகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.





# புத்தளம் - தில்லையடி பகுதியில் யானையால் மக்கள் பெரும் அவதி

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – தில்லையடி பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புப் பிரதேசத்துக்குள் யானை ஒன்று நேற்று (13) அதிகாலை வேளையில் உட்புகுந்து பல்வேறான சேதங்களை ஏற்படுத்தியுள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மதுரகம பகுதியில் இருந்து தில்லையடி மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் காட்டு யானை உள்நுழைந்துள்ளது என்று மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் பிரவேசித்து வீட்டு மதில்கள், வீட்டின் பிரதான வாயில் கதவுகள், சுவர்கள் என்பனவற்றுக்கு கடுமையான சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

காலை வேளையில் பேக்கரி உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக வருகை தந்த ஓட்டோ ஒன்றையும் அடித்து வீழ்த்தியுள்ளது.

ஓட்டோ சாரதி சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினாரல் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானையை பிரதேச இளைஞர்களும், பொதுமக்களும் இணைந்து விரட்டியடித்த போதிலும் பல மணித்தியாலங்களின் பின்னரே அந்த யானை அங்கிருந்து சென்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யானையை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் ஈடுபட்டனர்.

என்றும் இல்லாதவாறு காட்டு யானை தில்லையடி மக்கள் குடியிருப்புக்குள் உட்புகுந்தமையால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# சிறுவர் கண்காணிப்பு செயற்குழுக் கூட்டம்




(நூருல் ஹுதா உமர் )

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, அரோக்கியம் என்பவை தொடர்பான செயற்குழுக் கூட்டம் இடம் பெற்றது.

காலாண்டுக்கு ஒருமுறை இந்தக் கூட்டத்தில் இவை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இரண்டாவது காலாண்டுக் கூட்டம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடைவிலகல், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விஷேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் தொடர்பான விடயங்கள் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

பால்நிலை வன்முறை மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரதேச மட்டத்தில் தங்கள் அமைப்பு சார்ந்த வேலைத் திட்டங்கள், குடும்ப வன்முறை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் அவற்றை குறைப்பதற்கும் தடுப்பதற்குமான நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

கணக்காளர் திருமதி றிம்ஷியா அர்சாட், பொலிஸ் நிலைய நிர்வாக பொறுப்பதிகாரி எம்.வை. ஜௌபர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தி யோகத்தர் யூ.எல். அசார்டீன், நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி. யசரட்ன பண் டார ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

உயர்தரத்தை நிறைவு செய்த ஒவ்வொரு மாணவர்களதும் கனவாக பல்கலைக்கழகம் செல்வது காணப்படுகிறது. இதுநாள் வரையிலும் பெற்றோரின் பாதுகாப்புடன் அவர்களது வழிநடத்தலுடன் தமது வாழ்க்கையை வாழ்ந்த மாணவர்கள் தமது பட்டப் படிப்புக்காகப் பல்வேறு பிரதேசத்தில் இருந்து வருகின்ற மாணவர்களுடன் இணைந்து தமது கற்றலை மேற்கொள் கின்றனர்.

பாடசாலைக் காலங்களில் ஆசிரி யர்கள் வழங்கும் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளில் தவறாத ஆலோ சனைகளில் ஒன்றாக 'நன்றாக படித்தால் பல்கலைக்கழகம் செல்லலாம்...சிறந்த எதிர்காலம் அமையும்' என்பதாகும்.

அவ்வகையில் வாழ்க்கையில் மிக



## பல்கலைக்கழக மாணவர்களின்

# தடைகளை கடந்த இலட்சியப் பயணம்...!

முக்கியமான காலமாக பல்கலைக்கழக காலம் அமைகிறது.

பட்டப்படிப்பை நிறைவு செய்தபின் ஏதேனும் ஒரு தொழிலுக்கு விண்ணப் பித்து வாழ்வில் கரைசேர்வதே ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவர்களதும் கன வாக உள்ளது.

பல்கலைக்கழகம் எத்தகைய நன் மைகளை தன்னகத்தே கொண்டிருந் தாலும் அதேசமயம் வெளிக்கொணராத பல சோதனைகளையும் சவால்களையும் கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் அனைத்து மாண வர்களும் ஒரே விதமான பின்னணியை உடையவர்கள் அல்ல. அந்த வகையில் பொருளாதாரம், அடிப்படைத் தேவை கள், உளப்பாங்கு போன்ற அனைத்தும் ஒருவருக்கு ஒருவர் வேறுபடும். அதற் கேற்ற வகையில் மாணவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பல சவால்களுக்கு மத்தியிலேயே தமது பட்டப்படிப்பைத் தொடர்கின்றனர்.

இலங்கையில் அடுத்தடுத்து ஏற்பட்ட அசௌகரியமான நிகழ்வுகள் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்க ளிடத்தே பெரும் தாக்கங்களை ஏற்ப டுத்தின. முதலாவது அடியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அமைந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து நாடு பூராகவும் அனைத்து பல்கலைக்கழகங் களும் தமது கல்வி நடவடிக்கைகளை முடக்கின. பல பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டன. இவ்வதிர்ச்சியில் இருந்து மீண்டு வருவதற்குள் அடுத்து கொரோனா தொற்றானது முழு உல கையும் ஸ்தம்பிக்கச் செய்தது. பாது காப்புக் காரணமாகப் பட்டப்படிப்பு நடவடிக் கைகள் அனைத்தும் இணையவழி மூலம் நிகழ்நிலைக் கல்வியினூடாக மாணவர்கள் தமது கற்றலை மேற் கொண்டனர். அனைத்து மாணவர்க ளாலும் நிகழ்நிலைக் கல்வியை அணுக முடியவில்லை. அதற்கான அடிப்படை வசதிகளான கணனி, இணையம் போன்றவை மாணவர்களிடம் காணப் படவில்லை. நேரடிக் கல்வியினூடாக பெற்றுக்கொள்ளும் அனுபவத்தையும் புரிதலையும் மாணவர்களால் பெறமுடிய வில்லை. கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மாணவர் களைத் தளர விடவில்லை என்றே கூற வேண்டும். பாடவிதானங்களில் குழப்பங்கள் தீர முன்னரே மாணவர்கள் தேர்வெழுதினர்.

கடும் போராட்டங்களைக் கடந்து ஒருவழியாக பல்கலைக்கழகத்துக்கு நேரடியாகக் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்ற ஆறுதலுடன் மாணவர்கள் இருக்க அடுத்த பிரச்சி னையாக உருவெடுத்தது இலங்கையின் பொருளாதார நெருக்கடி.

இதன் பொருட்டு நாடு பூராகவும் பலர் ஆட்சிக்கு எதிராகவும் ஜனாதி பதிக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுத்தனர். குறிப்பாகப் பல் கலைக்கழக மாணவர்களே இதில் முனைப்பாகச் செயற்பட்டனர். வாழ்க் கைச் செலவீனங்கள் அதிகரித்த நிலை யில் அடிப்படை அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்தன. தட்டுப்பாடுகள் நிலவின. அனைத்துக் கட்டணங்களும் அதிகரித்தன.

குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் கள் இச்சூழ்நிலையில் பெரும் அசௌ கரியங்களை சந்திக்க நேரிட்டது. மாண வர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையான மகாபொல பணம் முடக் கப்பட்டது. பல மாதங்களாக மாண வர்களுக்கு உதவித்தொகை வரவு வைக்கப்படவில்லை. மாணவர்கள் அன்றாடம் நுகரும் உணவுப் பொருள் களை வாங்கவே திண்டாடினர்.

பாண், தேநீர், மதிய உணவுப்பொதி என உணவுச் செலவீனங்கள் அதிகரித் தன. பஸ் கட்டணங்கள் அதிகரித்தன. மாணவர்களது போக்குவரத்துக் கட்ட ணங்கள் அதிகரித்தன. அதேவேளை மின்வெட்டுக்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டது. சுமார் 12 மணிநேர தொடர்ச்சியான மின்வெட்டுக்களும் நாட்டில் பதிவாகியது குறிப்பிடத்தக்கது. மாணவர்களது கல்வி நடவடிக்கைக்கு எந்தவொரு சாதகமான நிலைப்பாடு களும் அமைந்திருக்கவில்லை.

மலையகப் பிரதேசத்தை சேர்ந்த மாணவர்களும் பிற வறுமை கோட்டின் கீழ் உள்ள மாணவர்களும் கடும் சவால் களை எதிர்நோக்கினர். குடும்பத்தாரிடம் பணத்தை கேட்க முடியாது, தமது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது தவித்தனர்.

அரசால் வழங்கப்படும் இலவசக் கல்வியைக் கூட ஆடம்பரமாகவும் தனியார் கல்வி நிறுவனத்தில் படிப்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்தியது. மாணவர்களால் தமது செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலை தோன்றியது.

இன்னும் இப்பொருளாதார நெருக் கடியின் விளைவுகளில் இருந்து பல மாணவர்கள் மீண்டு வரவில்லை. எதிர் பாராமல் ஏற்பட்ட இந்த அசௌகரியமான சூழ்நிலைகளால் மாணவர்களது பட்டப்படிப்பு கற்றல் காலம் உரிய காலத்தை விட பின் தள்ளப்பட்டது.

நான்கு வருட சிறப்பு கற்கைகள் ஐந்து, ஆறு வருடங்களாக பின்தள்ளப் பட்டது மறுக்கமுடியாத உண்மையாகும். மாணவர்களது வயது அவர்களது காலம் வீணடிக்கப்பட்டது. மேலும் விரி வுரையாளர்களது பணிப்புறக்கணிப்பும் மாணவர்களது கற்றலில் தாக்கத்தை

(13ஆம் பக்கம் பார்க்க)

# தடைகளை கடந்த...



(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தின.

இலங்கை அரசும் அமுல்படுத்திய வரிக்கொள்கைக்கு கண்டனம் தெரிவித்து பலர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்களது விரிவுரைகள் ஸ்தம்பித்தன.

இவ்வாறு பல்கலைக்கழகங்களில் உள்வாரியாக தமது கல்வியை தொடரும் ஒவ்வொரு மாணவர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமது கற்றலைப் பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே தொடர்ந்தனர். இந்த நிலையிலிருந்து மாணவர்கள் இன்னும் பூரணமாக வெளிவரவில்லை.

மற்றுமொரு பாரிய சமூகப் பிரச்சினையாக மாணவர்களது கல்வி அழுத்தம் காணப்படுகிறது. இதனால் பல மாணவர்கள் உளரீதியான அழுத்தங்களுக்கு, நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதன் உச்சக் கட்ட விளைவாக மாணவர்கள் தன்னுயிர் மாய்த்தல் என்னும் அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர். மாணவர்கள் உளநல பாதிப்புகளால் அழுத்தங்களுக்கு உள்ளாவதும், முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவதும் இதனால் தவறான முடிவுகளை கையாள்வது அண்மைக் காலங்களில் அச்சுறுத்தலுக்கு உரிய விடயமாக உருவெடுத்துள்ளது.

இதற்கு நமது நாடும் விதி விலக்கல்ல என்பதால் இதனைச் சரியான முறையில் அணுக வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அறிவு, திறன்கள், மனப்பாங்கு, செயற்பாடுகள், பண்புகள், பாடரீதியான அடைவுகள் அனைத்தும் மாணவர்களிடமும் ஒரே மாதிரியாகக் காணப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது இயற்கைக்கு முரணானதாகும்.

ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் பரீட்சைகளில் கூடுதலான பெறுபேறுகளைப் பெறவில்லை என்று ஏளனம் செய்வதும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் பின்தங்கி இருப்பின் அம்மாணவர்களை அவமானப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மாணவர்களை நிர்கதி அற்றவர்களாக மாற்றிவிடும்.

ஒரு மாணவன் கற்றலில் இடர்படுவதற்கான காரணங்களை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், விரிவுரைகளிலும், பெற்றோர்கள் முன்னிலையிலும் தகாத வார்த்தைப் பிரயோகம், தண்டனைகளை வழங்குதல், விரிவுரைகளுக்கு தடை விதித்தல் போன்றவை பாரதூரமான விளைவுகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தக் கூடும்.

பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள் காரணமாகவும் பல்கலைக்கழகங்களிலும் வீட்டிலும் காணப்படும் அழுத்தங்கள் அவமதிப்பு என்பன மாணவர்களை தன்னம்பிக்கை இழக்கச் செய்வதுடன் தனக்கும் படிப்புக்கும் பொருத்தம் இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துவதுண்டு.

பல்கலைக்கழக சூழல் என்பது வெறுமனே ஒரு பாடத்திற்கான மாணவர்களும் அதனுடன் தொடர்புடைய விரிவுரையாளர்கள் மட்டும் உள்ளடக்கியது அல்ல. மாறாக பல்வேறு இடங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றித்து இருக்கும் ஒரு கல்விக் கூடமாகும்.

ஒரு மாணவன் அவமானப்படுத்தப்படும் போது, சங்கடப்படுமாறு ஏதேனும் சூழல் அமையும் பட்சத்தில் குறித்த மாணவனை பல்கலைக்கழக மாணவர்களும் அவமானப்படுத்துவது போன்ற உணர்வையே அளிக்கும். எனவே இந்த இடத்தில் விரிவுரையாளர்களுக்கு பாரியதொரு பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உண்டு.

மாணவர்களை உரிய முறையில் அணுகி அவதானமாகக் கையாள வேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு பிரச்சனைகளுடன் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

வெளியில் புன்னகை முகத்துடன் விரிவுரையாளர்களையும் நட்பு வட்டாரங்களையும் கடந்து செல்லும் அம்முகங்களுக்கு பின்னால் ஆயிரம் சுமைகளுடன் கூடிய வலிகள் காணப்படும்.

இவர்களில் சிலர் வெளிப்படையாக கூறுவர் வேறு சிலர் உள்ளுக்குள்ளே வைத்து மன அழுத்தங்களுக்கு உட்படுவர். பல பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு அதிகமான கட்டுப்பாடுகளும் இறுக்கமான விதிமுறைகளும் அமைவதுண்டு. இவை மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளுக்கானது என்பதற்கு அப்பால் மாணவர்களை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் என்பதிலும் கரிசனை கொள்ள வேண்டும். வளமான எதிர்காலத்திற்காக தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்ற அழுத்தம் மாணவர்களுக்குத் தொடர்ந்து தரப்படுகிறது.

இதனால் பல மாணவர்களது உறக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், பசியின்மை, உற்சாகமின்மை போன்ற மன உளைச்சலின் ஆரம்ப அறிகுறிகள் தோன்றுகிறது.

கல்வி தொடர்பான மன உளைச்சலை எதிர்கொள்வதற்கான சிறந்த வழிமுறைகளாவன, ஆரோக்கியமான உத்திகளான கலை, விளையாட்டுகளில் ஈடுபடுதல், இசை நிகழ்வுகளில் பங்கு கொள்ளல், இசைத்தல், படைப்பாக்கம் மிகுந்த விடயங்களில் ஈடுபடல் மாணவர்களிடையே நிலவும் மன அழுத்தத்தை குறைக்கும் என பல ஆய்வுகள் கூறியுள்ளன.

உடற்பயிற்சி மற்றும் தியானங்களில் ஈடுபடுவது, குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுடன் உரையாடுவது ஆகியவை மன அழுத்தத்தை எதிர்கொள்ளச் சிறந்த வழிகளாகும். மாணவர்கள் எதிர்மறை உத்திகளை தவிர்க்க வேண்டும்.

மன அழுத்தத்தை எதிர்கொள்ள போதை மருந்துகள் உட்கொள்வது, மது அருந்துவது, தன்னைத்தானே தாக்கி கொள்வது, அதிகமாக கைப்பேசி பயன்படுத்துவது மாணவர்களின் பழக்க வழக்கங்களைச் சிதைக்கின்றன.

மிக முக்கியமான விடயமாக. பல்கலைக்கழக மாணவர்கள் எப்போதும் தொழில் வாழ்க்கை குறித்து மாற்று விருப்பங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். பெரும்பாலும் மாணவர்கள் ஒற்றை இலட்சியத்தைக் கொண்டிருக்கின்றார்கள். கல்வி, கல்லூரி, பல்கலைக்கழகம், பட்டம், நுழைவுத்தேர்வு மட்டுமே அவர்களது இலட்சியங்களாக இருக்கின்றன.

இது போன்ற ஒற்றை இலட்சியங்களால் “கருப்பு-வெள்ளை”, “எல்லாம் அல்லது ஒன்றும் இல்லை” என்று சிந்திக்க தலைப்படுகின்றனர். பலர் மாற்று வாய்ப்புகளை யோசிப்பதே இல்லை. தங்களுக்கு கிடைக்கும் தெரிவுகளையும் அவர்கள் சுருக்கிக் கொள்கின்றார்கள். இவை மாணவர்களுக்கான சாதகமான சூழ்நிலை இல்லாதபோது அவர்களுக்குள் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவர்களும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மன அழுத்தம், கல்வி நெருக்கீடு, நிதிப்பற்றாக்குறை, குடும்ப பிரச்சினைகள், அரசின் நெருக்கீடுகள், மாற்றும் காலநிலையும் அபாயங்கள் உலக தொற்று நோய்களின் தாக்கம் மாணவர்களது கல்வியை சுமையாக்கின்றன. சாதிக்கும் கனவுகளை சுமந்து கொண்டு பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைத்த மாணவர்கள் சொல்லானா துயரங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் தமது கல்வியை தொடர்கின்றனர். இலட்சியத்தை மனதில் உறையச்செய்த வண்ணம் பசி, தூக்கம் பாராது குடும்பத்தின் சுமைகளுடன் தமது கல்விச் சுமையையும் சுமந்து செல்கின்றனர் பல்கலைக்கழக மாணவர்கள்.

**ச.தனுஷ்கா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.







# முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு கற்றல், குடிதண்ணீர் உபகரணம்

(நூருல் ஹுதா உமர் )

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இ. த. க. வித்தியாலயம், நெடுங்கேனி தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளில் இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் மற்றும் குடிதண்ணீர் சுத்திகரிப்பு உபகரணம் வழங்கும் நிகழ்வானது இரு பாடசாலைகளதும் அதிபர்களான வே. நித்தியகலா மற்றும் கு. பஞ்சலிங்கம் ஆகியோர் தலைமையில் இன்று (14) பாடசாலைகளில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சி. காந்தன், கோ.சிவானநன், பெ. விவேகானந்தன், எஸ்.சனாதனன் ஆகியோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்கள் மற்றும் குடி தண்ணீர் சுத்திகரிப்பு உபகரணங்களைக் கையளித்தனர்.

300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் குடி தண்ணீரில் அதிகமான கல்சியம் காணப்படுவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலைத் தண்ணீரில் அதிகம் கல்சியம் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் குடிப்பதற்கான உகந்த நீர் இல்லை என்று அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி சான்றிதழ் வழங்கியிருந்தார்.

அதன் அடிப்படையில் மாணவர்கள் குடிப்பதற்கான தண்ணீரைப் பெறுவதற்கு இணைந்த கரங்கள் அமைப்பிடம் பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்தால் உதவி கோரப்பட்டது.

இதன் அடிப்படையில் இணைந்த கரங்கள் அமைப்பின் நன்கொடையாளர் ஆஸ்ரேலியா ராஜ்பவன் உணவக ஊரிமையாளர் ஜெயராஜ் விஸ்வலிங்கம் குடும்பத்தினர் நிதி அனுசரணை வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் கிராம சேவகர் லலிதா நிவேகாந்தன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுச் சங்க செயலாளர் கி. ஸ்ரீராமசுந்தரம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சங்க உறுப்பினர் த. நிசாந்தான், பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# அறுகம்பேயில் அலைச்சறுக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையில் உல்லாசப் பிரயாணிகளை கவரக் கூடிய பல கடல் பிர தேசங்கள் இருந்த போதிலும், பொதுவாகக் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அறு கம்பே அலைச்சறுக்கு விளையாட்டு சாகசங்கள் நிகழ்த்துவதற்கு சாதகமாக அமைந்துள்ளது.

அறுகம்பே மற்றும் அதனைச் சூழவுள்ள கடல் பிரதேசத்தில் அலைச்சறுக்கு விளையாடுவதற்கு 10 இடங்கள் உள்ளன.

ஏப்ரல் மாதம் முதல் ஒக்ரோபர் மாத இறுதிவரை அலைச்சறுக்கு சாகசங்களுக்கு கடலலை சாதகமாக அமைந்திருக்கும். இதனால் பொத்துவில் அறுகம்பே பிரதேசத்துக்குத் தற்போது உல்லாசப் பயணிகள் அதிகம் செல்வரைக் காணக்கூடியதாக உள்ளது.

# மகளின் காதலனை குத்தித் தாக்கிய தாய்!

நுவரெலியா மாவட்டததுக்கு உட்பட்ட கினிகத்தேன பிரதேசத்தில் இளைஞன் மீது பெண் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தனது மகளுடன் காதல் உறவில் ஈடுபட்ட 19 வயதுடைய மாணவனை மகளின் தாயார் கூரிய கத்தரிக் கோலால் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கினிகத்தேனை நகரில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு முன்பாக மாணவிக்கும் அவரது தாயாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பரபரப்பான சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைலேயே தாயாரின் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்று கினிகத்தேனை பொலிஸார் தெரி வித்தனர்.

கத்தரிக் கோலால் குத்தப்பட்டதில் 13 ஆம் வகுப்பு மாணவன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாணவனைக் கத்தரிக் கோலால் குத்திய பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த மாணவன் சிகிச்சைக்காகக் கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கல்முனை மாணவர் நாடாளுமன்ற அமர்வு

( எம்.எம்.எம்.அப்ராஸ்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த மாதம் இடம்பெற்ற நிலையில், முதலாவது நாடாளுமன்ற அமர்வு புதன்கிழமை (11) இடம்பெற்றது.

உத்தியோக பூர்வமாகச் சபாநாயகர் எம்.எப்.ஹம்னா தலைமையில், செயலாளர் நாயகம் அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக் – பிரதி செயலாளர் நாயகம் (ஒழுக்கம்), பிரதி அதிபர் எம்.ஆர்.எம். நௌஸாட் – பிரதி செயலாளர் நாயகம் (நிர்வாகம்), ஏ.எம்.றஸீன் – ஆசிரியர் மற்றும் பிரதி செயலாளர் நாயகம் (அபிவிருத்தி), எம். வை. எம். யூசுப் இம்றான் – ஆசிரியர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த அமர்வுக்கு விசேட அதிதிகளாக கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா, கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால், வலயத்தின் சமூக விஞ்ஞான பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் பி.டி.எம். மஹ்ரூப் ஆகியோர் கலந்து கொண்டனர். அமர்வைப் பார்வையிடுவதற்காகப் பெற்றோர்களும் வருகை தந்திருந்திருந்தனர்.

மாணவர் நாடாளுமன்றத்தில் 60 மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகர், பிரதிசபாநாயகர், பிரதமர், குழுக்களின் பிரதி தலைவர், சபை முதல்வர் உட்பட பத்து அமைச்சர்களும், பத்து பிரதி அமைச்சர்களும் நாடாளுமன்ற செயலாளர் நாயகமான அதிபர் முன்னிலையில் இதன் போது சத்திய பிரமாணம் செய்தனர்.

# ஓய்வூதியம் பெறவுள்ள உத்தியோகத்தர் செயலமர்வு!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று நேற்று வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்றது.

ஓய்வுக்கு முன் ஆயத்தமாதல் எனும் தொனிப்பொருளில் இந்த விசேட செயலமர்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இது இடம்பெற்றது.

மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி அனுசரணையில் நடைபெற்ற செயலமர்வில் அரச சேவையில் கடமையாற்றி ஓய்வூதியம் பெறவுள்ள சேவையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய அலுவலக நடவடிக்கைகள், அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஈ.ரி.எவ். மற்றும் ஈ.பி.எவ். இணை பெற்றுக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஓய்வுக்கு முன் உளவளத்தை மேம்படுத்துவதற்கான முன் ஆயத்தம் தொடர்பாக உளவள நிபுணர் எஸ்.ஸ்ரீதரன் ஓய்வூதியம் பெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வில் மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ப.விஷ்வகோகிலன், தொழில் உத்தியோகத்தர் திருமதி எம்.எம்.எஸ். சிஹாரா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஆரோக்கிய உணவுகளுடன் ஆசிரியர் தின நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மருவி வரும் கிராமிய உணவு வகைகளின் முக்கியத்துவத்தை ஆசிரியர்களின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி தரம் 10 பிரிவில் அதன் பகுதித் தலைவர்களான ஏ.எச்.எம்.நிஸான், ரீ.எஸ்.அஜ்மல் ஹுசைன் மற்றும் வகுப்பாசிரியர்களின் ஏற்பாட்டில் ஆரோக்கிய கிராமிய உணவுகளை கொண்டதான உணவு பரிமாற்றம் இடம்பெற்றது.

பாரம்பரிய உணவு வகைகளின் சுவை மற்றும் அதன் போசனைக் கூறுகள் பற்றி ஆசிரியர் மத்தியில் இந்த ஆசிரியர் தினத்தில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.



கல்லூரியின் அதிபர் எம்.ஐ.. ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் என்.எம்.மலீக்

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் டாக்டர் எம்.எச்.சனூஸ் காரியப்பர், பிரதி அதிபர்களான எம்.எச்.எம்கஅபூபக்கர், ஏ.எச்.எம்.அமீன்,உதவி அதிபர் எம்.ஜெமீல் , வகுப்பாசிரியர்கள்,

பகுதி தலைவர்கள் மற்றும் பாட ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# இஸ்ரேலில் இருந்து 28 தமிழர்கள் உள்பட மேலும் 235 இந்தியர்கள் நாடு திரும்பினர்



'ஒபரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து 2 ஆவது நாளாக இன்று 235 இந்தியர்கள் தலைநகர் டில்லி வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் 28 பேர் தமிழர்களும் உள்ளடங்குகின்றனர். தாயகம் திரும்பிய வர்களை வெளியுறவுத் துறை இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் வரவேற்றார்.

இதேவேளை, நேற்று 212 பேர் இஸ்ரேலில் இருந்து அழைத்து வரப் பட்டனர்.

இந்த நிலையில், இஸ்ரேலில் உள்ள இந்தியத் தூதரகம் சமூக வலைத்தள தளத்தில் பகிர்ந்த பதிவில்,

அடுத்தக்கட்டமாக இந்தியா செல்ல பதிவு செய்திருந்தவர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் முகவரி மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. படிப்படியாக பதிவு செய்த அனைவரும் இந்தியா அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது. இஸ்ரேலில்,18 ஆயிரம் இந்தியர்கள் வசிக்கின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த 7 ஆம் திகதி ரொக்கெட் குண்டுகளை வீசியும், துப்பாக்கி சூடு நடத்தியும் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காசா பகுதியில் இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியது. காசா மீது இஸ்ரேல் போர் தொடுப்பதால், இஸ்ரேலில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில் இஸ்ரேலில் இருந்து நாடு திரும்ப விரும்புபவர்களை, அழைத்து வர 'ஒபரேஷன் அஜய்' திட டத்தை இந்தியா தொடங்கியது.

இந்தியாவில் இருந்து சென்ற சிறப்பு விமானத்தில் முதல் கட்டமாக சுமார் 212 இந்தியர்கள் நாடுதிரும்பினர்.

இன்று 2 குழந்தைகள் உள்பட 235 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் 28 தமிழர்களை டில்லியில் தமிழகப் பிரதிநிதிகள் வரவேற்றனர். அவர்கள் இன்றைக்கே சென்னைக்கு அழைத்துவரப்படுகின்றனர்.

'ஒபரேஷன் அஜய்' மூலம் இந்தி யர்கள் கட்டணமின்றி தாயகம் அழைத்து வரப்படுகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# சோனியா காந்தி, பிரியங்கா சென்னைக்கு வருகை: தி.மு.க. மகளிர் உரிமை மாநாட்டில் பங்கேற்கின்றனர்



முன்னாள் முதல்வர் கருணாநிதி; நூற்றாண்டையொட்டி தி.மு.க. மகளிரணி சார்பில் சென்னை நந்தனத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மகளிர் உரிமை மாநாடு இன்று இடம்பெறு கின்றது.

நந்தனம் ஒ.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கேற் பதற்காக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோர் சென்னை வந்துள்ளனர்.

சென்னை விமான நிலையத்தில் அவர்களுக்கு புத்தகம் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு அளித்துள்ளார். அப்போது அமைச்சர்கள் நேரு, பொன்முடி, உதயநிதி ஸ்டாலின், கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், கனிமொழி மற்றும் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த மாநாட்டில் சோனியா காந்தி, பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுப்ரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொலிட் பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா உள்ளிட்ட இண்டியா கூட்ட ணியின் பல்வேறு முக்கிய அகில இந்தியத் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

# காசாவில் இருந்து வெளியேற வேண்டாம்: ஹமாஸ் அமைப்பினர் வேண்டுகோள்!



காசாவில் இருந்து மக்கள் வெளியேற வேண்டாம் என ஹமாஸ் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், காசாவின் வடக்குபகுதியில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம். இஸ்ரேல் இராணுவத்துக்கு அஞ்ச வேண்டாம். துணிச்சலுடன் செயல்படுங்கள் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இஸ்ரேல் இராணுவம் இதுவரை 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குண்டுகளை காசா பகுதி மீது வீசியுள்ளது. இதில் 1,530 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதிமீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதற்கு பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் நேற்று கூறும்போது, காசா பகுதி மீதான தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் உடனடியாகநிறுத்த வேண்டும். இல்லையெனில் இந்த போர் மத்திய கிழக்கின் இதர பகுதிகளுக்கும் பரவும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

லெபனானில் செயல்படும் ஹிஸ் புல்லா அமைப்பின் துணை தலைவர் நயீம் குவாசம் நேற்று கூறும்போது, பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் கொடூர தாக்குதல் களை நடத்திவருகிறது. இந்த போரில் ஹிஸ்புல்லா தலையிடக்கூடாது என்று உலகின் வல்லரசு நாடுகள், ஐ.நா.சபை உள்ளிட்டவை வலியுறுத்தி உள்ளன. யாருடைய அறிவுறுத்தலும் எங்களுக்கு தேவையில்லை. எங்களது கடமையை செய்வோம். நாங்கள் போருக்கு முழு மையாக தயார் நிலையில் உள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் விமானப்படைத் தளபதி உயிரிழப்பு



வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் விமானப்படைத் தளபதி முராத் அபு முராத் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலிய விமா னப்படை தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் விமானப்படைத் தலைமையகத்தை குறி வைத்து வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஹமாஸ் அமைப்பின் வான்வழித் தக்குதலுக்கான தலைமையகத்தைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இரவு நேர வான்வழித் தாக்குதலில் இந்த தலைமையகம் அழித்தொழிக்கப்பட்டது. இதில், ஹமாஸ் விமானப்படைத் தளபதி முராத் அபு முராத் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய கொடூர தாக்கு தலை வழி நடத்தியவர் இவர். இந்த தலைமையகத்தில் இருந்தவாறுதான் ஹமாஸ் தனது வான்வழித் தாக்குதலை நிர்வகித்து வந்தது.

ஹமாஸ்ன் தளபதிகள் பதுங்கி இருந்த நுக்பா உள்பட 12 இற்கும் மேற்பட்ட இடங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருக்கிறது. அந்த தளபதிகள்தான், கடந்த சனிக்கிழமை நடந்த தாக்குதலுக்குக் காரணமானவர்கள். இஸ்ரேலிய தரைப் படையும், விமானப்படையும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இஸ்ரேலின் வடக்கே, லெபனானில் இருந்து இஸ்ரேலிய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற பயங்கரவாதக் குழுவை இஸ்ரேலிய பாதுகாப்புப் படை வீரர்கள் அடையாளம் கண்டு அவர் கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதில், இஸ்ரேலுக்குள் ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகள் பலர் கொல்லப் பட்டனர். அத்துடன், தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் இலக்கை குறிவைத்தும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்தியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.